# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 06  03.12.2025 புதன்கிழமை  இதழ் : 337  பக்கங்கள் : 08





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


# சிறைச்சாலையில் திட்டம் தீட்டப்பட்டு; ஒத்திகை பார்த்து இளைஞர் கொலை!

## 6 சந்தேகநபர்கள் கைது - இருவர் தலைமறைவு

த. பிரதீபன்

யாழ்ப்பாணம், டிசெ. 03

திருநெல்வேலியில் இளைஞர் ஒருவர் பட்டப்பகலில் வாளால் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் சிறைக்குள் திட்டம் தீட்டப்பட்டு - தெல்லிப்பழையில் ஒத்திகை பார்க்கப்பட்டு நடந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன், தொடர்புடைய சந்தேகநபர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவர் தலைமறைவாகியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட்டுவிட்டு உறவினரான இளைஞருடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த 30 வயதான



நேசராஜா ஜெஜித் என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வீதியில் ஓடஓட வெட்டிக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் 6 சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் வன்னி பிரதேசத்தில் வாகனத்தில் சென்ற மூவரும் அவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவ லின் அடிப்படையில் மூவருமே இவ்வாறு கைதாகினர். இவர்கள் மல்லாகம், தெல்லிப்பழை, கொக்குவிலை சேர்ந்த 20 - 25 வயதுக்கு உட்பட்டவர்களாவர். அவர்களிடம்

07

# இலங்கை கோரிய உதவிகள் இன்றையதினம் வழங்கப்படும்

## இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா

கொழும்பு, டிசெ. 03

இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் ஜனாதிபதி அநுர குமார கோரிய உதவி இன்றைய தினம் வழங்கப்படும் என்று இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார, 10 தடுப்புடன்

07

# வெள்ளம் பாதித்த வீடுகளை சுத்தப்படுத்த ரூ. 25 ஆயிரம்!

## ஜனாதிபதி அநுர குமார அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 03

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக வெள்ளத்தில் சிக்கிய வீடு அல்லது சொத்துகளை சுத்தப்படுத்த வழங்கப்படும் உதவித் தொகையை 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது. நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் பணிப்புரைக்கு அமைய இந்த

07

# உயர்தர பரீட்சை ஜனவரி நடக்கும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 03

டித்வா புயல் தாக்கத்தால் இடைநிறுத்தப்பட்ட உயர்தரப் பரீட்சை அடுத்தாண்டு ஜனவரி மாதம் நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

07

டித்வா புயல் பாதிப்பு:

# 465 பேர் உயிரிழந்தனர் 15 இலட்சம் பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 03

டித்வா புயல் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 465ஆக உயர்ந்துள்ளது. இதேநேரம், 366 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேசமயம், 4 இலட்சத்து 37 ஆயிரத்து 507

07

டித்வா புயல் பாதிப்பு:

# வட மாகாணத்தில் 275,819 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 03

டித்வா புயலால் வடக்கு மாகாணத்தில் 84 ஆயிரத்து 729 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 75 ஆயிரத்து 819 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 9 பேர் உயிரிழந்தனர் என்று அனர்த்த முகாமைத்து பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், நால்வர் காணாமல் போயுள்ளனர். 19 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 489 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 7 ஆயிரத்து 177 குடும்பங்களை சேர்ந்த 22 ஆயிரத்து143 இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.

**மன்னாரில்...**

40 ஆயிரத்து 605 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 483 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இருவர் உயிரிழந்தனர். 10 வீடுகள் முழுமையாகவும் 68 வீடுகள் பகுதியளவிலும்

07

# முன்னாள் அமைச்சர் ரத்நாயக்க கைது!

கொழும்பு, டிசெ. 03

முன்னாள் அமைச்சர் சி. பி. ரத்நாயக்க இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் நேற்று கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அவர் கொழும்பு பிரதான நீதிவான்

07

# நாளை முதல் மீண்டும் மழை; அச்சமடைய தேவையில்லை!

## வளிமண்டலவியல் திணைக்களம்

கொழும்பு, டிசெ. 03

வடகிழக்கு பருவப்பெயர்ச்சி மழை நாளை வியாழக்கிழமை முதல் கிடைக்கும். மழையில் அசாதாரண அதிகரிப்பு இருக்காது. இதனால், மக்கள் அச்சப்படத் தேவையில்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளை முதல் கிடைக்கும் பருவமழை படிப்படியாக நிலைபெறும். வடக்கு, வட - மத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்கு மழை கிடைப்பனவு அதிகரிக்கும்.

வானிலை மாற்றம் தொடர்பாக வளிமண்டலவியல்

07

# அதிக விலைக்கு உணவு பொருள் விற்போருக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 03

டித்வா சூறாவளியால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அதிக விலைக்கு உணவு பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

உணவுப் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் தொடர்பில் தமக்குத் தகவல் வழங்குமாறும் அந்தச் சபை பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

அத்துடன், மாவட்ட ரீதியாக உள்ள

07

# டித்வா புயல் தாக்கத்தால் 2.7 இலட்சம் சிறார் பாதிப்பு

## யுனிசெவ் அமைப்பு தகவல்

கொழும்பு, டிசெ. 03

டித்வா சூறாவளி பேரிடரால் பாதிக்கப்பட்ட 14 இலட்சம் பேரில் 2 இலட்சத்து 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்கள் என்று ஐ. நா. சிறுவர் நிதியம் (யுனிசெவ்) தெரிவித்துள்ளது.

தகவல் தொடர்பு, போக்குவரத்து தடைகள் இன்னும் சீராகாதமையால் உண்மையான பாதிப்பு இதிலும் அதிகமாக இருக்கலாம்

07

# வடக்கு, மட்டு. ரயில் சேவை முற்றாக தடைப்பட்டுள்ளது

கொழும்பு, டிசெ. 03

டித்வா சூறாவளி ஏற்படுத்திய தாக்கங்களால் தண்டவாளங்கள் சேதமடைந்துள்ளன. வடக்கு மாகாணம் மட்டக்களப்பு, திருகோணமலை மலையகம் என்பவற்றுக்கான ரயில் சேவைகள் தொடர்ந்தும் முற்றாக தடைப்பட்டுள்ளன என்று புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், தண்டவாளங்களைச் சீரமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சேவைகள் விரைவில் வழமைக்குத் திரும்பும்

07

# ஏ. எல். பரீட்சை விடைத்தாள்களுக்கு எந்தப் பாதிப்புகளும் ஏற்படவில்லை

## பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 03

இந்த ஆண்டு க. பொ. த. உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களின் விடைத் தாள்களுக்கு அனர்த்தத்தால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திக லியனகே தெரிவித்துள்ளார்.

உயர்தர பரீட்சையின் அனைத்து விடைத் தாள்களும் உரிய பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட்டுள் ளன. மேலும், பரீட்சை

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தால் வவுனியாவில் 6,509 பேர் பாதிக்கப்பட்டனர்!

வவுனியா, டிசெ. 03

வெள்ளத்தால் வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 874 குடும்பங்களை சேர்ந்த 6 ஆயிரத்து 509 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று முன்தினம் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, மாவட்ட செயலாளர் பி. ஏ. சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா. கமலதாசன், வவுனியா பிரதேச செயலாளர் இ. பிரதாபன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் சுதாகர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ-10)

# வவுனியா மாவட்டத்தில் 43 எய்ட்ஸ் நோயாளர்கள்

## இளையோரே மிக அதிகம்



வவுனியா, டிசெ. 03

வவுனியாவில் 43 பேர் எய்ட்ஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் இளவயதினரே அதிகளவானோர் என்று மாவட்ட பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் பொறுப்பு மருத்துவ அதிகாரி கு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

உலக எய்ட்ஸ் தொற்று தடுப்பு தினமான நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

நாடு முழுவதும் இதுவரை 7 ஆயிரத்து 168 பேர் எய்ட்ஸ் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

5 ஆயிரத்து 544 ஆண்களும் ஆயிரத்து 603 பெண்களும் இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இடைநிலை பால்நிலையை சேர்ந்த 21 பேரும் இதில் அடங்குவர். ஆயிரத்து 629 இந்த நோயால் நாட்டில் இறந்துள்ளனர். எந்தவித தொற்று அறிகுறிகளும் இன்றி நோய்த் தொற்றுடன் 5 ஆயிரத்து 700 பேர் நடமாடி வருகிறார்கள்.

வவுனியா மாவட்டத்தில் இதுவரை 43 எச். ஐ. வி. தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 21 ஆண்கள், 13 பெண்களுமாக 34 பேர் மருந்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் இருவர் கர்ப்பவதி தாய்மார். அவர்களிடம் இருந்து பிள்ளைக்கு எச். ஐ. வி. தொற்றாத வகையில் சிகிச்சையளிக்கப்படுகிறது. 13 பேர் இறந்துள்ளனர்.

நாட்டில் 15 வயது தொடக்கம் 25 வயதிற்குட்பட்டவர்களே தொற்றாளர்களாக இருக்கும் நிலை உள்ளது. நோய்த் தொற்று ஏற்பட்டவர் சாதாரண ஒரு மனிதரை போலவே இருப்பர். அவரது முகத்தை வைத்து நோயை கண்டுபிடிக்க இயலாது. குருதியை பரிசோதனை செய்வதன் மூலம் மாத்திரமே அதனை கண்டுபிடிக்க முடியும். எனவே, ஒரு தரமாவது பரிசோதனையை மேற்கொண்டால் குறித்த நோய் மற்றவர்களுக்கு தொற்றாமல் தடுக்கலாம் - என்றார். (ஐ-10)

**சமைத்த உணவுகள் வீணடிப்பு:**

# தேவையறிந்து சம பங்கீட்டை உறுதிப்படுத்தக் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 03

நாட்டில் நிலவிய அனர்த்த நிலைமை காரணமாக நாடு முழுவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பலரும் தங்களால் முடிந்த நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இந்தநிலையில் சமைத்த உணவுகள் வீதியில் வீசப்பட்டு இருக்கும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி,

தனியார் நிவாரண உதவிகள் முறையாக ஒருங்கிணைக்கப்படாத காரணத்தினால் இவ்வாறான நிலைமை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மற்றும் முப்படைகளின் கணக்கிடப்பட்ட மற்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிவாரணப் பணிகள் மூலம் உணவுகள் வீணாவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, நிவாரண உதவிகளை அதிகாரபூர்வ அரச வழிமுறைகள் மூலம் வழங்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஆகவே நாட்டில் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் வழங்கப்படும் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் சமமாகச் சென்றடைய வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (அ)

# மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு இன்று

தென்மராட்சி, டிசெ. 03

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருவி நிறுவனத்தின் கௌரவ தலைவர் க. சர்வானந்தா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். சுதர்சன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச செயலர் எவ். சி. சத்தியசோதி, சாவகச்சேரி நகர சபை தவிசாளர் வி. சிறிபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# வெள்ளத்தால் முல்லைத்தீவில் 12,691 குடும்பங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 03

முல்லைத்தீவில் வெள்ள அனர்த்தத்தால் 12 ஆயிரத்து 691 குடும்பங்களை சேர்ந்த 39 ஆயிரத்து 193 பேர் பாதிப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 656 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 62 பேரும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 4 ஆயிரத்து 400 குடும்பங்களை சேர்ந்த 13 ஆயிரத்து 559 பேரும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில், 5 ஆயிரத்து 443 குடும்பங்களை சேர்ந்த 17 ஆயிரத்து 132 பேரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 408 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 41 பேரும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில், 520 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 811 பேரும் வெலிஓயா பிரதேச செயலக பிரிவில் 264 குடும்பங்களை சேர்ந்த 588 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் மீட்கப்பட்டு 6 பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள 40 இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

உறவினர் வீடுகளில், 3 ஆயிரத்து 620 குடும்பங்களை சேர்ந்த 9 ஆயிரத்து 913 பேரும் இடைத்தங்கல் முகாம்களில் ஆயிரத்து 186 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 178 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கோம்பாவில் பகுதிக்கான போக்குவரத்து துண்டிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 03

புதுக்குடியிருப்பிலிருந்து கோம்பாவிலுக்கு செல்லும் வீதியில் பாலம் முழுமையாக உடைந்துள்ளது. இதனால், கோம்பாவில் பகுதியுடனான போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை பிரதான வீதியில் அமைந்துள்ள சிறி சுப்ரமணிய வித்தியாலயாசாலைக்கு அருகாமையில் உள்ள பாலமே இவ்வாறு உடைந்துள்ளது.

அத்துடன், பாலம் அமைந்துள்ள பகுதியில் வெள்ளம் இப்போதும் வேகமாக பாய்கிறது. இதனால், அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், பாலத்தை விரைவாக புனரமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# கெற்பேலி மீனவர் உதவி கோரிக்கை!

தென்மராட்சி, டிசெ. 03

டித்வா புயலின் தாக்கத்தால் தென்மராட்சி கிழக்கு கெற்பேலி பிரதேச மீனவர்களின் வாழ்வா தாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர் சங்கத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

பலத்த காற்றால் படகுகள், மீன்பிடி வலைகள் உள்ளிட்ட கடற்றொழிலுக்கு பயன்படுத்தப் படும் உபகரணங்கள் கடுமை யாக சேதமடைந்துள்ளன.

இதனால் தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், தமது வாழ்வாதா ரத்துக்கான உதவிகளையும் அவர்கள் கோரியுள்ளனர். (ஐ)

# ஒட்டுசுட்டான் பிரதே மக்களுக்கு பெரண்டினா நிறுவனம் நிவாரணம்



முல்லைத்தீவு, டிசெ. 03

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுக்கு வழங்குவதற்காக பெரண்டினா நிறுவனத்தால் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் இ. நிசாந் தனிடம் இந்த நிவாரணப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் ந. மயூரன் பெரண்டினா நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர், சோ. ஜெயச்சந்திரன், இளைஞர் அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் ர. ஜதீஸ்வரன், வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. நிவேதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# யாழில் கீரிச்சம்பாவை பதுக்கிய வர்த்தகருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 03

யாழ்ப்பாணத்தில் கீரிச்சம்பா அரிசியை பதுக்கிய கடை உரிமையாளர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவிய அனர்த்த நிலைமைகளை தொடர்ந்து வர்த்தகர்கள் சிலர் பதுக்கலில் ஈடுபடுகின்றனர் என்று கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக யாழ். மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், திருநெல்வேலியிலுள்ள வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது, கீரிச்சம்பா அரிசி கடையில் இருந்தும் விற்பனை செய்ய மறுத்த கடை உரிமையாளர் ஒருவர் கண்டறியப்பட்டு அவர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அனர்த்த நிலைமைகளை காரணம் காட்டி செயற்கைத் தட்டுப்பாடு, பொருட்களுக்கான விலைகளை அதிகரித்து விற்பனை செய்தல் தொடர்பாகவும் பதுக்கல் நடவடிக்கைகளில் வர்த்தகர்கள் ஈடுபடுவதாகவும் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைப்பதனால் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் தொடர்ச்சியாக திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.12.2023 புதன்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# வெள்ளம் வரும் முன்

வெள்ளம் வரும் முன் அணை கட்டுதல் என்று தமிழில் ஒரு கூற்றுண்டு. இயற்கை அனர்த்தங்களை எவராலும் தடுக்க முடியாது. ஆனால், முன்னெச்சரிக்கையுடன் சில நடவடிக்கைகளை எடுக்கலாம். பேரனர்த்தங்களின்போது எவ்வாறு உடனடியாக நிலைமைகளை எதிர்கொள்வது. அதற்கான ஆளணி மற்றும் ஒருங்கிணைப்பை எவ்வாறு ஏற்படுத்துவது.

வளர்ச்சியடைந்த நாடுகள் போன்று விடயங்களை கையாளக்கூடிய வளங்கள் இலங்கைபோன்ற நாடுகளிடம் இல்லாவிட்டாலும்கூட, முடிந்தவரையில் இருக்கின்ற வளங்களை அடிப்படையாகக் கொண்டு விடயங்களைத் திறம்பட ஒருங்கிணைப்பதன் ஊடாக இவ்வாறான பேரழிவின் தாக்கங்களை முடிந்தவரையில் தடுக்க முடியும். உயிரழப்புகளை கட்டுப்படுத்த முடியும்.

சூறாவளி நாட்டை விட்டுக் கடந்த பின்னரும் மண்சரிவு ஏற்பட்டிருக்கிறது. மண்சரிவு என்பது சூறாவளியின் ஒரு விளைவு. எந்தெந்த இடங்களில் அவ்வாறான ஆபத்துகள் இருக்கின்றன என்பதை ஓரளவு மதிப்பிட்டு அப்பகுதியிலுள்ள அனைத்து மக்களையும் அப்புறப்படுத்தியிருந்தால் மண்சரிவால் ஏற்பட்ட உயிரழப்புகளை முடிந்தவரையில் தடுத்திருக்க முடியும். ஆட்சியிலிருப்பவர்கள்தான் காரணம் என்று கூறிவிட்டு பொறுப்பிலிருந்து விலகி ஓடுவது இலகுவான விடயம். ஆனால், இது ஒரு கூட்டுப் பொறுப்பு. மலையகத்திலேயே அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. மலையகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தலைமைகள் அனைவருக்கும் இதில் பொறுப்புண்டு. ஆண்டாண்டு காலமாக மலையகம் தொடர்பில் பேசும் இவர்கள் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வாறான திட்டங்களை பரிந்துரைத்திருந்தனர்?

இலங்கைத் தீவில் ஓர் அழிவு நடந்த பின்னர்தான் அதனைப் பற்றி பேசுவது உண்டு. வருமுன் காப்போம் என்னும் திட்டங்கள் தொடர்பில் எந்தவொரு திட்டமும் இல்லை ஆனால் "அப்பே ரட்ட" என்னும் கோஷத்தை பெருமையுடன் முன்வைப்பதுண்டு. ஆனால், "அப்பே ரட்ட"வை பாதுகாக்க என்ன திட்டம் இருக்கிறது என்றால் எவரிடமும் பதில் இல்லை. பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பிறகே அது தொடர்பில் பேசப்பட்டது.

ஆனால், அவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடி ஏற்படும்வரையில் அதுபற்றி முன்னெச்சரிக்கைகள் எதுவும் இல்லை. பொருளாதார நிபுனர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்வோர் என்ன செய்து கொண்டிருந்தனர் என்னும் கேள்விக்கும் பதிலில்லை. ஆனால், பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பின்னர் அதற்கு பொறுப்பானவர்கள் என்று சிலரை நோக்கி விரல் நீட்டப்பட்டது. பின்னர், ஒருவர் அதனை மீட்டுவிட்டதாக புகழ்ச்சிகள் முன்வைக்கப்பட்டன. தற்போது நாடு மீண்டும் பொருளாதார ரீதியிலும் நெருக்கடியை சந்தித்திருக்கிறது.

இன்றும் இலங்கையின் நெருக்கடிகளுக்கு நாட்டின் அனைத்து மக்களும் இலங்கையர்களாக சிந்திக்க முடியாததொரு நிலைமையே காணப்படுகிறது என்பதை ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப அரசியல் ரீதியில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்த முடியாத நிலைமையே காணப்படுகிறது. கட்டமைப்பு மாற்றம் தொடர்பில் பேசிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன்றுவரையில் தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் பிரச்னைகள் தொடர்பில் மௌனம் காத்துவருகிறது. தமிழ் மக்களும் தங்களுக்கு வாக்களித்திருக்கின்றனர் என்று ஒரு பதிலுடன் பிரச்னைகளை திசைதிருப்பலாம் என்று எண்ணுவதாகவே தெரிகிறது. ஜனாதிபதி எளிமையானவராக இருக்கிறார் என்பது மட்டும் ஒரு நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தப் போதுமானதல்ல. நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு முன்னரே ஒருவேளை நடந்தால் என்ன செய்வது, எவ்வாறு விடயங்களை எதிர்கொள்வது என்னும் முன்தயாரிப்புடன் இருப்பதும் ஒரு கட்டமைப்பு மாற்றம்தான்.

# அநாவசியமாகப் பொருட்களை கொள்வனவு செய்யவேண்டாம்!

## நுகர்வோர் அதிகார சபை கோரிக்கை

கொழும்பு, டிசெ. 03

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த சூழ்நிலை காரணமாக மக்கள் அதிகளவில் பொருட்களை சேகரிக்கும் நிலையில் தேவையற்ற வகையில் அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தேவையற்ற முறையில் பொருட்களைப் பதுக்கி வைப்பதைத் தவிர்த்து, தமக்குத் தேவையான அளவுக்கு மாத்திரம் பொருட்களை கொள்வனவு செய்யுமாறு அந்த அதிகார சபை பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், சரியான நடைமுறையின் கீழ் மக்களுக்குத் தேவையான பொருட்களின் அளவை மட்டும் வழங்குமாறு சிறப்பு அங்காடிகள் மற்றும் வர்த்தகர்களிடம் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில், தற்போதுள்ள விலைகள் மற்றும் நியாயமான விலைகளின் கீழ் மட்டுமே பொருட்களை விற்பனை செய்து, அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் ஆதரவு வழங்கு மாறுவர்த்தக சமூகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செயற்படாத வர்த்தகர்களைக் கண்டறிய நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும், அவ்வாறான சிக்கல்கள் ஏதேனும் இருந்தால், நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையை நேரடியாக தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## அதிவேக வீதியின் அத்துருகிரிய நுழைவாயில் மீண்டும் திறப்பு

கொழும்பு, டிசெ. 03

சீரற்ற வானிலை காரணமாக வெள்ளத்தில் மூழ்கியிருந்த தெற்கு அதிவேக வீதியின் அத்துருகிரிய நுழைவாயில் நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போது அந்த நுழைவாயிலைப் பயன்படுத்தி சாரதிகள் பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய சீரற்ற வானிலையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் குறித்த பகுதி கடந்த சில நாட்களாக மூடப்பட்டிருந்தது.(எ)

## 3 வாகனங்கள் மோதி விபத்து: ஒருவர் மரணம் மூவர் காயம்!

கொழும்பு, டிசெ. 03

மஹவ - நாகொல்லாகம வீதியில் விஹேனேகம சந்தி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூன்று பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக வேகத்தில் பயணித்த வான் ஒன்று, சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் வானின் சாரதியும், சைக்கிளில் பயணித்த இருவரும் மோட்டார் சைக்கிளின் செலுத்துநர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சைக்கிளில் பயணித்த ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் மின்சாரம், எரிவாயு அபாயம்!

கொழும்பு, டிசெ. 03

நாட்டில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் பின்னர் பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புற சூழல் தொடர்பில் கவனமாக இருக்குமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

குறிப்பாக மின்சாரம் மற்றும் எரிவாயு பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு பொலிஸ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

மின் மூலங்களை அணுகுவதற்கு முன் உத்தி யோகபூர்வ மின் தொழில்நுட்ப வல்லுநரின் பரி சோதனையைப் பெறுங்கள்.

ஈரமான மின் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டாம்.

எரிவாயு கசிவு ஏற்பட்டால், மின்சாரம் அல் லது எரிவாயு மூலம் இயங்கும் எந்த உபகரணங்க ளையும் இயக்குவதைத் தவிர்க்கவேண்டும் என பொலிஸார் கோரியுள்ளனர். (அ)


## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 21 வெளிநாட்டவர்கள் மீட்பு!

நுவரெலியா, டிசெ. 03

நுவரெலியா பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக இடம்பெயர்ந்திருந்த 21 வெளிநாட்டவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல், விமானப் படை யின் அநுராதபுரம் முகாமுக்கு உட்பட்ட 6 ஆம் இலக்க ஹெலிகொப்டர் படையணிக்கு சொந்தமான எம்.ஐ. - 17 ரக ஹெலிகொப்டர் மூலம் இவர்கள் மீட்கப்பட்டு, கட்டுநாயக்க விமானப் படைத்தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்** கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் பொறுப்புகள்அதிகரிக்கும். தடைகளைதாண்டிமுன்னேறுவீர்.

**மிதுனம்** உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி. உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**கடகம்** எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதைக் கூடும்.

**கன்னி** சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர் நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும்.

**துலாம்** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராததனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை நாள்.

**விருட்சிகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**தனுசு** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மகரம்** எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமையை கிடைக்கும்.

**கும்பம்** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**மீனம்** கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். புதிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சக ஊழியர்களைப் அதிகரிக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 03

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உலர் உணவு நிவாரணத்தை இனிவரும் காலங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கான சமைத்த உணவை கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக மட்டுமே வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வேறு எவரும் சமைத்த உணவை பாதுகாப்பு நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்க முடியாது. பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு வழங்குவதற்காக அரசாங்கத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக வேறு எவரும் பாதுகாப்பு நிலையங்களில் தங்கியிருப்பவர்களுக்கு சமைத்த உணவு வழங்க அனுமதிக்கப்படவில்லை.


எனவே, தேவையற்ற விரயங்களை தவிர்த்து கொள்ளவும்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நண்பர்கள், உறவினர் வீடுகள் மற்றும் தங்களுடைய வீடுகளில் இருப்பவர்கள் தங்களுக்குரிய சமைத்த உணவு தேவையை கிராம உத்தியோகத்தரிடம் தெரிவிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். அல்லது உலர் உணவு நிவாரணத்தை இனிவரும் காலங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

உணவு அல்லாத பொருட்களை அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக மட்ட நிறுவனங்கள் மாவட்டச் செயலகத்துக்கு நேரடியாக வழங்குவதன் மூலம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் பிரதேச செயலாளர்களின் கோரிக்கை மற்றும் தேவையின் அடிப்படையில் பங்கீடு செய்யப்பட்டு வழங்க முடியும்.

சிறிய அளவில் அல்லது குறைந்த எண்ணிக்கையில் உணவு அல்லாத பொருட்களை தாங்கள் நேரடியாக பாதுகாப்பு நிலையங்களில் உள்ளவர்களுக்கும் ஏனைய பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வழங்கலாம். பாதுகாப்பு நிலையங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் உணவல்லாத பொருட்களின் பதிவுகள் கிராம அலுவலரால் மேற்கொள்ளப்படும். பாதுகாப்பு நிலையங்களுக்கு வெளியில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் உணவல்லாத பொருட்களின் விவரங்களை சம்பந்தப்பட்டவர்கள் கிராம அலுவலர் அல்லது பிரதேச செயலருக்கு தெரிவிப்பதன் மூலம் பிரதேச செயலக ரீதியாக, பேணப்படும் பொருட் பதிவுக்குள் உட்படுத்தப்படும். இத்தகைய விவரங்களை கிராம அலுவலரிடம் அல்லது பிரதேச செயலாளர்களிடம் பதிவுக்குட்படுத்தாத போது பிரதேச மட்ட பதிவுக்குள் உட்படுத்தப்பட முடியாத நிலைமை ஏற்படும்

இந்த நடைமுறைகளை அரச சார்பற்ற நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பின்பற்றுவதன் மூலம் உணவுப்பொருட்களின் வீண் விரயங்களை தவிர்த்துக் கொள்வதோடு பாதிக்கப்பட்ட அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் பொருட்கள் தேவை அடிப்படையில் பங்கீடு செய்யப்படுவதோடு வழங்கப்பட்ட பொருட்களுக்கான பதிவுகள் உரிய முறையில் பேணப்படும் என்பதனை அறியத் தருவதோடு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.- என்றார். (எ-03)



# வவுனியாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கப்பட்டன

வவுனியா, டிசெ. 03

வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் 1874 குடும்பங்களைச் சேர்ந்த 6,509 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், ஒரு வாரத்துக்கு ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 2100 ரூபாய் வீதம் தேவையான உலர் உணவுப் பொருட்கள் இதன்போது வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க, மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ. சரத் சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா. கமலதாசன், வவுனியா பிரதேச செயலாளர் இ. பிரதாபன் மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் சுதாகர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 03

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 34 நாளை மறுதினம் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர் க. கைலநாதன் "திருமுகங் கொடுத்த படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம்

## யாழ். அரசாங்க அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 03

அனர்த்த நிலைமைகளை காரணம் காட்டி செயற்கைத் தட்டுப்பாடு மற்றும் பொருட்களுக்கான விலைகளை அதிகரித்து விற்பனை செய்தல் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார். மேலும், யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் தொடர்ச்சியாக திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



இதேவேளை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் யாழ்ப்பாணம் நகரப்பகுதி, கே.கே. எஸ். வீதி மற்றும் திருநெல்வேலியில் உள்ள கடைகளில் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த திடீர் பரிசோதனையில் கீரிசம்பா அரிசி கடையில் இருந்தும், அதனை விற்பனைக்கு மறுத்த கடை உரிமையாளர் மீது நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடரால் பாதிப்புற்ற மக்களுக்கு ஜேர்மனியிடம் உதவி கேட்டார் சஜித்!



கொழும்பு, டிசெ. 03

**பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜேர்மன் தூதுவரைச் சந்தித்தார்.**

டித்வா சூறாவளி புயலால் ஏற்பட்ட கடுமையான பேரிடர் நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், ஜேர்மன் குடியரசின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கைக்கான ஜேர்மன் சிறப்புத் தூதுவர் கலாநிதி பெலிக்ஸ் நியூமனை நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சஜித் பிரேமதாஸ சந்தித்துக் கலந்துரையாடினார்.

தற்போதைய பேரிடர் சூழ்நிலை காரணமாக எழுந்துள்ள பல்வேறு பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பில் இரு தரப்பினரும் இதன்போது கவனம் செலுத்தினர். பேரிடருக்குப் பிந்தைய நிலைமை மற்றும் தொற்றுநோய் நிலைமையை கையாள ஜேர்மன் குடியரசால் இந்நேரத்தில் இலங்கைக்கு பெற்றுத் தர முடியுமான அதிகபட்ச பங்களிப்பைப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக் கொண்டார்.

அத்தியாவசிய சேவைகள் மற்றும் வைத்தியசாலைகளின் சேவைகளைப் பேணிச் செல்வதற்கும், சேதமடைந்த ரயில் போக்குவரத்துப் பாதைகள் மற்றும் வீதிப் போக்குவரத்து கட்டமைப்புகளை புனர்நிர்மாணம் செய்வதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது ஜேர்மனிடம் உதவி கோரினார்.

குறிப்பாக, ரயில் சேவையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு ஜேர்மன் அரசாங்கத்திடமிருந்து விசேட பங்களிப்பையும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரியுள்ளார். (அ)



# இடரால் பாதிப்புற்ற மக்களுக்கு ஐக்கிய அரபு இராச்சியம் உதவி

கொழும்பு, டிசெ. 03

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து உதவிகளை ஏற்றிய விமானம் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தது உணவு மற்றும் கூடாரங்கள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிப் பொருட்கள் இந்த நன்கொடையில் அடங்கும்.

உதவிப் பொருட்களை, கொழும்பில் உள்ள ஐக்கிய அரபு இராச்சிய தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ரசீட் அலி அல் மஸ்ரோய் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

அவற்றை வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் (மத்திய கிழக்கு) செவ்வந்தி டி சில்வா, மேஜர் ஜெனரல் சுமேத விஜேகோன் மற்றும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரியின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி கெப்டன் தமிந்த ரம்புக்வெல்ல ஆகியோர் அவற்றைப் பொறுப்பேற்றனர். (அ)

## மினிப்பே பகுதியில் 22 சடலங்கள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 03

மினிப்பே - நெலும்கம பகுதியில் இருந்து 22 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டவர்களின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மினிப்பே - நெலுங்கம பகுதியில் மொத்தம் 16 வீடுகள் காணப்பட்டுள்ள நிலையில் மொத்தம் 12 வீடுகள் மண்சரிவில் சிக்குண்டுள்ளன. (அ)

# அநியாய விலை உயர்வுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர்



கொழும்பு, டிசெ. 03

நாட்டில் நிலவும் அனர்த்த சூழ்நிலை காரணமாக, இலங்கை சமூகம் ஒற்றுமையாகவும் பொறுப்புடன்வும் செயல்பட வேண்டிய இந்த முக்கிய கட்டத்தில், சில விற்பனையாளர்கள் பொருட்களை நியாயமற்ற உயர்ந்த விலையில் விற்பனை செய்து இலாபம் சம்பாதிக்க முயல்வது நெறிமுறையற்றது டன் சட்டவிரோதமான செயலாகும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி எச்சரித்துள்ளார்.

அனர்த்த நிலைமையை பயன்படுத்தி விலை அதிகரித்தல், பொருட்களை பதுக்கி வைத்தல், மோசடியான அல்லது அநியாயமான வர்த்தக நடைமுறைகள் போன்றவற்றில் ஈடுபடும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்ட பொருட்கள் அரசாங்கம் நிர்ணயித்த விலைப் பட்டியலின்படி விற்பனை செய்யப்பட வேண்டும். அதேபோல், பட்டியலிடப்படாத பிற பொருட்களும் நியாயமான விலைக்குள் விற்பனை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு குடிமகனுக்கும் அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைக்கும்படி அனைத்து விற்பனையாளர்களும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என ஆணையாளர் நாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# ஹெலி விபத்தில் உயிரிழந்த விமானிக்குப் பதவி உயர்வு!

கொழும்பு, டிசெ. 03

இலங்கை விமானப்படையின் பெல் 212 ஹெலிகொப்டரின் தலைமை விமானியான விங் கொமாண்டர் நிர்மல சியம்பலாப்பிட்டிய லுனுவில பகுதியில் விமானத்தை அவசரமாக தரையிறங்க முயன்றபோது விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளார்.

அவரது சிறப்பான சேவையை அங்கீகரிக்கும் விதமாக, 2025 நவம்பர் 30 முதல் விங் கொமாண்டர் பதவிநிலையிலிருந்து குரூப் கப்டன் பதவி நிலைக்கு பதவி உயர்த்தப்பட்டார்.

அவரது உடல் நேற்று மாலை இரத்மலானை இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அவரது இறுதிச் சடங்குகள் விமானப்படையின் முழு மரியாதையுடன் நாளை மறுதினம் நடைபெறும். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மழையுடனான காலநிலை தொடரும்

கொழும்பு, டிசெ. 03

வடக்கு மற்றும் தென் மாகாணங்களில் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களின் சில இடங்களில் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் அம்பாறை மாவட்டத்திலும் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

திருகோணமலை தொடக்கம் காங்கேசன்துறை ஊடாக மன்னார் வரையான அத்துடன் களுத்துறை தொடக்கம் காலி, மாத்தறை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றர் வேகத்தில் தென் மேற்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

நாட்டை சூழவுள்ள கடல் பிராந்தியங்கள் மிதமான அலையுடன் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# களனி கங்கையின் நீர்மட்டம் குறைகிறது

கொழும்பு, டிசெ. 03

களனி கங்கையின் நீர்மட்டம் தற்போது குறைவடைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, களனி கங்கை வடிநிலத்தின் தாழ்நிலப் பகுதிகளைப் பாதித்த வெள்ள நிலைமைகளும் குறைந்து வருவதாக அந்தத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தவிர, களுகங்கை, மல்வத்து ஓயா உள்ளிட்ட நீர்த்தேக் கங்களின் நீர்மட்டங்களும் தற்போது குறைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களனி கங்கையின் நாகலம் வீதியில் உள்ள நீர் அளவீட்டின் நீர்மட்டம் நேற்று அதிகாலை 02: 00 மணிக்கு 8 அடியாக இருந்ததுடன், அதிகாலை 03: 00 மணிக்கு 7.9 அடியாகக் குறைந்துள்ளது.

இருப்பினும், அங்கு பெரும் வெள்ள நிலைமை தொடர்ந்து நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், ஹங்வெல்ல நீர் அளவீட்டில் நீர்மட்டம் நேற்று அதிகாலை 02:00 மணிக்கு 8 அடியாக இருந்ததுடன், அதிகாலை 03:00 மணிக்கு 7.93 அடியாகக் குறைந்துள்ளது.

இது மேலும் அபாய மட்டத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

களுகங்கையின் எல்கம நீர் அளவீட்டில் நீர்மட்டம் நேற்று அதிகாலை 02:00 மணிக்கு 10.40 அடியாக இருந்ததுடன், அதிகாலை 03:00 மணிக்கு 10.30 அடியாகக் குறைந்துள்ளது. இது மேலும் அபாய மட்டத்தில் உள்ளது.

அத்துடன் மல்வத்து ஓயாவின் தந்திரமலை நீர் அளவீட்டில் நீர்மட்டம் நேற்று அதிகாலை 02:00 மணிக்கு 8.98 அடியாக இருந்ததுடன், அதிகாலை 03:00 மணிக்கு 8.95 அடியாகக் குறைந்துள்ளது.

அங்கும் பாரிய வெள்ளம் அபாய நிலை நீடிப்பதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# திருமலை சீனன்குடாவில் ஒருவர் சுட்டுக்கொலை!

திருகோணமலை, டிசெ. 03

திருகோணமலை, சீனன்குடா பொலிஸ் பிரிவில் உள்ள 05ஆவது இடுகை பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்களால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முதலாம் திகதி திங்கட்கிழமை இரவு இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 05ஆவது இடுகை பகுதியைச் சேர்ந்த 59 வயதுடையவர்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்களை கைது செய்ய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பாடசாலை மாணவி கர்ப்பம்: தந்தை முறைப்பாடு, தாய் கைது

## சந்தேக நபரை தேடி வரும் பொலிஸார்

கல்முனை, டிசெ. 03

பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கர்ப்பமான சம்பவம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் கனிஷ்ட பிரிவில் கல்வி கற்று வரும் மாணவியே இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையில் கல்முனையில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவியின் தந்தை மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் கல்முனை தலைமையக பெண்கள், சிறுவர் பிரிவு பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலைக்கு இரண்டு மாதங்களாக செல்லாத பாதிக்கப்பட்ட மாணவி குறித்து பாடசாலை நிர்வாகம் அம்மாணவியின் தாயிடம் வினவியதாகவும் உரிய பதில் இன்மை காரணமாகவும் தாயார் கூறிய முரண்பாடான பதில்களில் சந்தேகம் காணப்பட்ட நிலையில் தற்போது மாணவியின் தந்தை குறித்த விடயம் அறிந்து பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தார்.

மேலும் குறித்த சம்பவத்துக்கு உடந்தையான மாணவியின் தாயார் கைது செய்யப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். மாணவியின் பெற்றோர் விவாகரத்து ஆன நிலையில் பிரிந்து வாழ்கின்றனர்.

குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையான பாதிக்கப்பட்ட மாணவி அவரது தாயாருடன் தகாத தொடர்பில் இருந்த நபரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

தற்போது இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அஸாரின் வழிகாட்டுதலின் கீழ் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி தலைமையில் கல்முனை தலைமையக பெண்கள், சிறுவர் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அம்பாறையை இருளில் மூழ்கடித்த மின்வெட்டு!

## பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வலியுறுத்தல்

கல்முனை, டிசெ. 03

கடந்த நவம்பர் 27ஆம் திகதி முதல் அம்பாறை மாவட்டத்தை முற்றாக முடக்கியுள்ள தொடர் மின்வெட்டு மற்றும் அது குறித்து பொதுமக்களுக்கு உரிய தகவல்களை வழங்க மின்சார சபை தவறியுள்ளமை குறித்து நீதிக்கான மய்யம் தனது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இந்த பாரிய மின் தடையால் வீடுகள், வர்த்தக நிலையங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் விவசாயப் பண்ணைகள் என சுமார் ஒரு இலட்சத்து 70,000இற்கும் அதிகமான நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த சில நாட்களாக தொடர்ந்து 24 மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதாகவும், இடையிடையே மிகக் குறுகிய நேரத்துக்கு மட்டுமே, எந்தவித முன்னறிவிப்புமின்றி மின்சாரம் விநியோகிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகளைப் பாதுகாத்தல், அத்தியாவசிய இயந்திரங்களை இயக்குதல் உள்ளிட்ட அன்றாட அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதில் மக்கள் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

வெள்ள அனர்த்தத்தால் உட்கட்டமைப்புகளுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளமையை ஏற்றுக்கொண்டாலும், சீரமைப்புப் பணிகளின் நிலைமை அல்லது மின்சாரம் எப்போது வழமைக்குத் திரும்பும் என்பது குறித்து மின்சார சபை இதுவரை எந்தவித உத்தியோகபூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை என நீதிக்கான மய்யம் குற்றம் சாட்டியுள்ளது.

பிராந்திய மின்சார சபை அலுவலகங்களின் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கப்படுவதில்லை எனவும், நுகர்வோருக்கு குறுஞ்செய்தி, சமூக ஊடகங்கள் அல்லது இணையத்தளம் ஊடாக பகுதி வாரியான தகவல்கள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தகவல் இருட்டடிப்பு காரணமாக மக்களிடையே தேவையற்ற பதற்றமும், பொருளாதார இழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

மின்சார விநியோகத்தின் நம்பகத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் அனர்த்த காலங்களில் பொதுமக்களுக்கு முறையான தகவல்களை வழங்குதல் ஆகியன இலங்கை மின்சார சட்டம், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நுகர்வோர் தரநிலைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ சட்டம் ஆகியவற்றின் கீழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலையில் மின்சார சபையின் செயல்பாடுகள் இந்த சட்டக் கடமைகளை மீறுவதாக அமைந்துள்ளதென அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிடுமாறு கோரி இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் நீதிக்கான மய்யம் முறைப்பாடு செய்துள்ளது. (எ)

# 70 பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை!

பதுளை, டிசெ. 03

பதுளை, கண்டி, நுவரெலியா உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள 70 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு குறித்த மூன்றாம் நிலை சிவப்பு எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

மேலும், 27 பிரதேச செயலக பிரிவுகளுக்கு முதல் மற்றும் இரண்டாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

# திருகோணமலை மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ கூட்டம்

திருகோணமலை, டிசெ. 03

மகாவலி கங்கை பெருக்கெடுப்பு மற்றும் மாவிலாறு உடைப்பு காரணமாக, திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அதிக நீர்வரத்தால் உருவாகியுள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பில் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ சிவில் கூட்டம் மாவட்ட செயலக உப ஒன்று கூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திர, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் என். தலங்கம மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார ஆகியோர் கலந்துகொண்டனர்.

சம்பந்தப்பட்ட அரச துறைகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலில், தற்போதைய நீர் மட்டத்தின் நிலைமை, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகள், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான அவசர உதவி வழங்கல், முன் எச்சரிக்கை மற்றும் இடமாற்றத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

மேலும், எதிர்வரும் நாட்களில் ஏற்படக்கூடிய அபாயங்களைக் கருத்தில் கொண்டு,

ஆபத்தான பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்,

தேவையான இடமாற்றத் திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மாவட்ட நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், நிலைமையைக் கட்டுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதன்போது அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏ.எல்...

நடைபெறும் காலப்பகுதியில் ஒவ்வொரு நாளும் பரீட்சை நிறைவடைந்த பின்னர், அனைத்து விடைத் தாள்களும் பாதுகாப்பாக உரிய இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இது பல ஆண்டுகளாக சரியாக நடந்துவரும் ஒரு நடைமுறை.

காலநிலை நிலைமைகள் குறித்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடி மிகுந்த அவதானத்துடன் செயல்பட்டு வருகிறோம் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## உயர்தர...

அத்துடன், நாடு வழமைநிலைக்கு மீண்டு வருகிறது. இதனால், அறிவிக்கப்பட்டபடி, எதிர்வரும் 16ஆம் திகதி பாடசாலைகள் மீளத் திறக்கப்படும். நிலைமையில் மாற்றம் இருந்தால் பரிசீலனை செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

இதேபோன்று, அறிவிக்கப்பட்டபடி பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தொழில் கல்வி நிறுவனங்கள் எதிர்வரும் 8ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் - என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முன்னாள்...

நீதிமன்றின் உத்தரவில் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வருமானத்தை விஞ்சிய சொத்துகள் தொடர்பான விசாரணைக்கு வாக்குமூலம் அளிக்குமாறு அவருக்கு லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு உத்தரவிட்டிருந்தது.

இதற்கமைவாக நேற்றைய தினம் வாக்குமூலம் வழங்கச் சென்றபோதே முன்னாள் அமைச்சர் சி. பி. ரத்நாயக்க கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 465 பேர்...

குடும்பங்களை சேர்ந்த 15 இலட்சத்து 58 ஆயிரத்து 919 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், 61 ஆயிரத்து 875 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 32 ஆயிரத்து 752 பேர் ஆயிரத்து 433 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

783 வீடுகள் முழுமையாகவும் 31 ஆயிரத்து 417 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வெள்ளம்...

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

“இடர் முகாமைத்துவ நிலையத்தின் வேண்டுகோளையடுத்து ஜனாதிபதி வழங்கிய அறிவுறுத்தலின் பேரில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக” நிதியமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும அறிவித்துள்ளார்.

அத்துடன், இந்த உதவித் தொகையை வழங்குதற்காக 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் இது வரவு - செலவுத் திட்டத்தில் அனர்த்த முகாமைத்துவத்துக்காக ஒதுக்கப்பட்ட 3 ஆயிரம் கோடி ரூபாயில் இருந்து வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## டித்வா...

என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட சேதம் - அத்தியாவசிய சேவைகளுக்கு ஏற்பட்ட இடையூறு - பொருளாதார நெருக்கடியின் தொடர் தாக்கம் என்பவற்றால் சிறாரிடையே நோய்த் தொற்று அபாயம், ஊட்டச்சத்து குறைப்பாடு, உளநெருக்கடி போன்ற அபாயங்கள் அதிகரித்துள்ளன.

இதேசமயம், "சிறுவர்களுக்கு அவசரமாக உதவி தேவைப்படுகிறது. உயிர் காக்கும் சேவைகள் தேவைப்படும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களைச் சென்றடைவது ஒரு காலக்கெடுவுக்கு எதிரான போட்டியாக உள்ளது" என்று யுனிசெவ்வின் இலங்கைக்கான பிரதிநிதி எம்மா பிரிகாம் கூறியுள்ளார். (ஐ)

## வடக்கு...

சேதமடைந்துள்ளன. 3 ஆயிரத்து 767 குடும்பங்களை சேர்ந்த 11 ஆயிரத்து 800 பேர் 62 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

***யாழ்ப்பாணத்தில்...***

16 ஆயிரத்து 849 குடும்பங்களை சேர்ந்த 53 ஆயிரத்து 727 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூவர் உயிரிழந்தனர். இரு வீடுகள் முழுமையாகவும் 352 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 693 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 215 பேர் 29 இடைத்தங்கல் முகாம்களில் தற்போது தங்கியுள்ளனர்.

***முல்லைத்தீவில்...***

12 ஆயிரத்து 691 குடும்பங்களை சேர்ந்த 39 ஆயிரத்து 193 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இருவர் உயிரிழந்தனர். நால்வர் காணாமல் போயுள்ளனர். 4 வீடுகள் முழுமையாகவும் 789 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. ஆயிரத்து 186 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 178 பேர் 40 இடைத்தங்கல் முகாம்க ளில் உள்ளனர்.

***கிளிநொச்சியில்...***

8 ஆயிரத்து 264 குடும்பங்களை சேர்ந்த 25 ஆயிரத்து 631 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரு வீடுகள் முழுமை யாகவும் 145 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந் துள்ளன. ஆயிரத்து 52 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 154 பேர் 29 இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.

***வவுனியாவில்...***

6 ஆயிரத்து 320 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 785 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இருவர் உயிரிழந்தனர். ஒரு வீடு முழுமையாகவும் 4 ஆயிரத்து 135 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 479 குடும் பங்களை சேர்ந்த ஆயிரத்து 796 பேர் 8 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# மக்களுக்கு உதவ முன்வராத கூட்டுறவு சங்கங்கள் இயங்குவதில் அர்த்தமில்லை!

## வடக்கு ஆளுநர் அதிருப்தி

*யாழ்ப்பாணம், டிசெ. 03*

இயற்கை பேரிடரால் மக்கள் சொல்லொணாத் துயரங்களை சந்தித்துக்கொண்டிருக்கும் இக்கட்டான நேரத்தில், அவர்களுக்கு உதவுவதற்கு முன் வராத கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குவதில் எவ்வித அர்த்த மும் இல்லை. அவ்வாறான சங்கங்கள் கடைகளை இழுத்து மூடிவிட்டுச் செல்லலாம் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் இடர் பாதிப்புகள் மற்றும் தேவைகளைக் கண்டறிவதற்கான விசேட கலந்துரையாடல் நேற்று முந்தினம் நடைபெற்றபோதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர்,

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பதற்கு கடந்த இரண்டு தினங்களாகக் கூட்டுறவுச் சங்கங்களை அணுகிய போதும், அவர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை. அவர்கள் விநியோக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கப் பின்னடிக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டியிருந்தார்.

இதனைக் கேட்ட ஆளுநர், மக்களுக்காக உருவாக்கப்பட்ட சங்கங்கள் மக்கள் துயரப்படும் போது உதவாவிடில் எதற்காக இருக்கின்றன? எல்லோரும் தங்களைத் தாங்களே பெரிதாக நினைத்துக்கொள்கிறார்களே தவிர, மக்களின் நலன் மீது அக்கறை கொள்வதில்லை - என்று காட்டமாகக் கூறினார்.

இந்தக் கூட்டத்தில், வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களினதும் உடனடி மற்றும் நீண்ட காலத் தேவைகள் குறித்து இக்கூட்டத்தில் தனித்தனியாக ஆராயப்பட்டது.

வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகள், மதகுகள் மற்றும் மின்சார விநியோகக் கட்டமைப்புகளை உடனடியாகச் சீர்செய்ய வேண்டும்.

பேரிடரால் விவசாயப் பயிர்கள் பெருமளவில் அழிவடைந்துள்ளன. எனவே, வயல் நிலங்களில் மீள் பயிரிடல் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கை ஆகியவற்றில் ஈடுபட விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் முன்னுரிமை அடிப்படையிலான தேவைகளைப் பட்டியலிட்டு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் ஒருங்கிணைந்து இப்பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் எனவும் ஆளுநர் உத்தரவிட்டார். (ஐ)

# 3,700 எரிவாயு சிலிண்டர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளன!

*யாழ்ப்பாணம், டிசெ. 02*

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குத் தேவையான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இன்றும் நாளையும் கொண்டுவரப்படவுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

ஆயிரத்து 716 சிலிண்டர்கள் இன்றைய தினமும் 2 ஆயிரத்து 217 சிலிண்டர்களும் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படவுள்ளன.

பொது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், கட்டம் கட்ட மாகத் தொடர்ச்சியாக எரிவாயு சிலிண்டர்களை கொண்டு வர நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## சிறைச்சாலையில்...

நடத்தப்பட்ட விசாரணைகளில் தெரியவந்த விடயங்கள் வருமாறு,

கடந்த மாதம் கொக்குவில் சந்தைக்குள் இளைஞர் ஒருவரை சிலர் மிகமோசமாக தாக்கியிருந்தனர். அது தொடர்பான காணொலிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த விவகாரம் பாராளுமன்றத்திலும் எதிரொலித்தது. இதைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் படி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட நபர் தன்னை சிறைக்கு அனுப்பிய வரை பழிவாங்குமாறு தெல்லிப் பழையில் கந்துவட்டி தொழிலில் ஈடுபடுபவருக்குக் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து அவரின் ஒழுங்கமைப்பில் நால்வர் குழு தயார் செய்யப்பட்டது. சுமார் ஒரு மாத காலமாக கொலையான இளைஞரின் நடவடிக்கைகளை வேவுபார்க்கப்பட்டு தகவல்கள் பரிமாறப்பட்டன.

இதைத் தொடர்ந்து, கொலை நடந்த ஞாயிற்றுக்கிழமைக்கு முதல்நாள் தெல்லிப்பழையில் வீடொன்றில் தாக்குதலுக்கு ஒத்திகை பார்க்கப்பட்டது.

கொலை நடந்த அன்றைய தினம் திருநெல்வேலி சந்தைக்கு அருகிலும் அதற்கு முன்பாக சுமார் 500 மீற்றர் தொலைவிலும் தலா இருவர் வீதம் மோட்டார் சைக்கிள்களில் காத்திருந்துள்ளனர். பின்னர் இளைஞரை பின்தொடர்ந்து வந்து அவரை வெட்டினர். இதன்போது, தப்பி ஓடியவரை விரட்டிச் சென்று அவரின் காலை வெட்டித் துண்டாக்கினர். படுகாயங்களால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் இளைஞர் உயிரிழந்தார்.

இதன்பின்னர், வாள்வெட்டை நடத்தியவர்கள் உரும் பிராயில் ஆடைகளை மாற்றிவிட்டு வாகனம் ஒன்றில் தப்பிச் சென்றனர். அவர்கள் வன்னியில் சென்று கொண் டிருந்தபோதே பொலிஸார் அவர்களை கைது செய்தனர். கைதானவர்களிடமிருந்து கொலைக்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், வாள், தாக்குதல் நடத்தியபோது அணிந்திருந்த ஆடைகள் என்பவையும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை தொடர்ந்து விசாரித்து வரும் பொலிஸார் தப்பிச் சென்ற இருவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## அதிக...

நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளிடமும் இது தொடர்பில் முறைப்பாடு அளிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கை...

கூடிய பாலங்கள், 15 விரைவு மீட்பு படகுகள், 10 தள பாடங்கள் மற்றும் கண்காணிப்பு ட்ரோன்கள், 6 செயற் கைக்கோள் தொலைபேசிகள் மற்றும் 500 நீர் சுத்திகரிப்பான்கள் அடங்கும் என்று தெரியவருகிறது. (ஐ)

## வடக்கு

என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, புதிய திருத்தப்பட்ட அட்டவணையின்படி ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன. பிரதான ரயில் மார்க்கத்தில் அம்பேபுஸ்ஸ வரையிலும் புத்தளம் ரயில் மார்க்கத்தில் கொச்சிக்கடை வரையிலும் கரையோர ரயில் மார்க்கம் வழமைபோன்றும் நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாளை...

திணைக்களத்தால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றும் அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## வங்காள விரிகுடாவில் நிலநடுக்கம்

கொழும்பு, டிசெ. 03

வங்காள விரிகுடாவில் நேற்றுக் காலை 4.2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந் நிலநடுக்கத்தால் எதுவித சேதமும் ஏற்படவில்லை. இருப்பினும் இந் நிலநடுக்கத்தால் சுனாமி போன்ற அனர்த்தங்கள் ஏதும் ஏற்படுமா எனும் அச்சம் மக்களிடையே நிலவுவதால் நில அதிர்வு மையம் தொடர்ந்து இதுகுறித்த கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது. (அ)

## இலங்கை பேரிடர் நிலை; ரஷ்ய ஜனாதிபதி இரங்கல்!

கொழும்பு, டிசெ. 03

நாட்டில் பேரிடரால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் பெரும் சேதம் தொடர்பில் ரஷ்யா தனது இரங்கல்களைத் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தனது இரங்கலை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பியுள்ளார்.

இந்த கடினமான காலகட்டத்தில் இலங்கையுடன், ரஷ்யா ஒன்றித்து நிற்பதாகவும் அந்நாட்டு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பேரிடரால் உயிரிழந்தவர்களுக்கும், அவர்களின் அன்புக்குரியவர்களுக்கும் தனது அனுதாபங்களைத் தெரிவிக்குமாறு ஜனாதிபதி அநுரவிடம், ரஷ்ய ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

அத்துடன் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் எனத் தாம் பிரார்த்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (அ)

## இலங்கையை மீட்டெடுக்க ரூபா 31 பில்லியன் தேவை!

கொழும்பு, டிசெ. 03

நாட்டில் நிலவிய அதிதீவிர வானிலைக் காரணமாக, ஏற்பட்ட சேதங்களிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்கு, சுமார் 31 பில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

டித்வா புயல், நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை நாசமாக்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், இலங்கை தொடர்பில் கவலையை வெளிப்படுத்தியுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா, இலங்கையின் மீட்சிக்கும் மீளெழுச்சிக்கும் அவசியமான ஆதரவை வழங்குவதற்குச் சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமூகங்களுடனும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்கிவரும் மீட்புப் பணியாளர்கள், மருத்துவப் பணியாளர்களுடனும் தாம் உடன் நிற்பதாக தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 50 ஆயிரம் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்கவுள்ளதாக மாலைதீவின் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## இலங்கையில் அனர்த்தம்; மன்னர் சாள்ஸ் இரங்கல்

கொழும்பு, டிசெ. 03

தென்கிழக்கு ஆசியா முழுவதும் கடுமையான புயல்களால் ஏற்பட்ட பேரழிவால் தானும் தனது மனைவியும் மிகுந்த வருத்தமடைந்துள்ளதாக பிரித்தானியாவின் மன்னர் சாள்ஸ் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த புயல்கள், பாதிக்கப்பட்ட அனைவரின் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் எவ்வளவு பாதித்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாக மன்னர் சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த கடினமான நாட்களில் அவசர நிலைகளுக்குத் துணிச்சலுடன் பதிலளித்து அத்தியாவசிய உதவிகளை வழங்கும் அனைவரையும் பாராட்டுகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பாதிப்புற்ற வடக்கு மக்களுக்கு உதவ உள்ளூர், புலம்பெயர் உறவுகள் ஆர்வம்!

### மோசடி இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்த கோருகின்றார் மாகாண ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், டிசெ. 03

**பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண மக்களுக்கு உதவுவதற்கு உள்ளூர் மற்றும் புலம்பெயர் உறவுகள் ஆர்வத்துடன் முன்வருகின்றமை மகிழ்ச்சியளிக்கிறது. எனினும், இவ்வுதவிகள் பயனாளிகளைச் சரியான முறையில் சென்றடைவதையும், மோசடிகள் இடம்பெறாதிருப்பதையும் உறுதிப்படுத்த, அந்தந்த மாவட்ட செயலர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள "இடர் முகாமைத்துவக் குழுக்களை" தொடர்புகொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஐ.நா. முகவர் அமைப்புக்கள், சர்வதேச மற்றும் உளளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான அவசர கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலின்போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

பல தரப்பினரும் உதவிகளை வழங்கத் தயாராக உள்ளனர். இருப்பினும், அனைவரும் ஒரே வகையான உதவிகளை வழங்குவது மக்களின் முழுமையான தேவையைப் பூர்த்தி செய்யாது. மாவட்டச் செயலகங்கள் ஊடாகத் தேவைகள் கண்டறியப்பட்டு, அதற்கேற்ப உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

சில இடைத்தரகர்கள் அல்லது குழுக்கள், உதவிகளை வழங்குவதாகக் கூறி வெளிநாடுகளில் உள்ளவர்களிடம் நிதியைப் பெற்றுக்கொண்டு, பயனாளிகளுக்குப் பெயரளவில் மட்டும் சிறிய உதவிகளை வழங்கிவிட்டுப் ஒளிப்படங்களை அனுப்புவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவ்வாறான மோசடிகளைத் தடுக்க, நன்கொடையாளர்கள் மாவட்ட செயலகத்தின் "தேவைப் பட்டியலை" பெற்றுக்கொண்டு உதவிகளை வழங்குவதே சிறந்தது.

அரசாங்கம் அத்தியாவசிய நிதியையும் நிவாரணங்களையும் வழங்கி வருகிறது. எனவே, அரசால் வழங்கப்படும் நிவாரணங்களுக்கு அப்பால், மக்களுக்குத் தேவைப்படும் ஏனைய உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்களும், நன்கொடையாளர்களும் வழங்குவது பொருத்தமாக இருக்கும்.

மக்கள் நலன்புரி நிலையங்களிலிருந்து வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளதால், அவர்களின் தேவைகள் மாறுபடும். வாழ்வாதார உதவிகள் மற்றும் மீள்குடியேற்றத் தேவைகளை அறிந்து உதவுவது அவசியம்.

அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள நிவாரண நிதியத்துக்கும் புலம்பெயர் உறவுகள் நம்பிக்கையுடன் நிதியுதவிகளை வழங்கி வருகின்றனர்-என்றார்.

இக்கலந்துரையாடலில் ஐ.நா. முகவர் அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டதுடன், தமது நிவாரணப் பணிகளை மாவட்டச் செயலகங்களின் ஒருங்கிணைப்புடனேயே முன்னெடுப்பதாக உறுதியளித்தனர்.

நிவாரணப் பணிகளை ஒருங்கிணைக்க விரும்புவோர் பின்வரும் மாவட்ட செயலக பதவிநிலை அதிகாரிகளைத் தொடர்புகொள்ளவும்:

யாழ்ப்பாணம்: சுரேந்திரநாதன் - 077 484 0199
கிளிநொச்சி: அஜித்தா - 077 565 0671
மன்னார்: பிரதீப் - 071 990 5324
வவுனியா: கமலதாசன் - 077 613 8369
முல்லைத்தீவு: ரஜினிகாந்த் - 077 370 7720 / கோகுலராஜ் - 077 395 7886. (அ)

# இலங்கைக்கு உதவ இந்திய வான்பரப்பை பாகிஸ்தான் பயன்படுத்துவதற்கு அனுமதி!

கொழும்பு, டிசெ. 03

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்புவதற்காக இந்திய வான்பரப்பைப் பயன்படுத்துவதற்கு பாகிஸ்தானுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை விமானம் மூலம் அனுப்புவதற்கான தமது முயற்சிகள் தாமதமானதாக பாகிஸ்தான் முன்னதாக தெரிவித்திருந்தது.

நிவாரணப் பொருட்களைக் கொண்டு செல்லும் தங்களது விமானம் இந்திய வான்பரப்பைப் பயன்படுத்த இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளமையில் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

தேசிய அனர்த்த முகாமைத்துவ அதிகாரசபை மற்றும் பாகிஸ்தான் விமானப்படை ஆதரவுடன், பாகிஸ்தான் இராணுவத்தின் 45 பேர் கொண்ட நகர்ப்புற தேடல் மற்றும் மீட்புக் குழுவினர் சி-130 ரக விமானத்தில் இலங்கைக்குப் புறப்படத் தயாராக இருந்தனர்.

எனினும், இந்த நடவடிக்கையை முற்றிலும் மனிதாபிமான நடவடிக்கை என்று பாகிஸ்தான் குறிப்பிட்டிருந்தும், இந்திய வான்பரப்புக்கான அனுமதி மறுக்கப்பட்டதால், இந்த விமானப் பயணம் தடைப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மாற்று வழியில் பொருட்கள் இலங்கையைச் சென்றடைய சுமார் எட்டு நாட்கள் ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்திய வான்பரப்பை மனிதாபிமான அடிப்படையில் பயன்படுத்துவதற்கு அனுமதி கோரி பாகிஸ்தான் அரசாங்கம் நேற்று முன் தினம் இந்தியாவிடம் விண்ணப்பமொன்றை சமர்ப்பித்தது.

இந்த நிலையில் குறித்த விண்ணப்பத்துக்கு உடனே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் கோரிக்கையானது துரிதமாகவும், காலதாமதமின்றியும் வழங்கப்பட்டதாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## இலங்கையின் நிலையை உன்னிப்பாக கண்காணிப்பதாக அமெரிக்கா உறுதி!

கொழும்பு, டிசெ. 03

இலங்கையில் ஏற்பட்ட பேரனர்த்தத்துக்கு பின்னர், அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான விசேட தூதுவரும், வெள்ளை மாளிகையின் ஜனாதிபதி பணியாளர் அலுவலகத்தின் பணிப்பாளருமான செர்ஜியோ கோர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடியுள்ளார்.

இது குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகம் "எக்ஸ்" சமூக வலைத்தளத்தில் ஒரு பதிவை இட்டுள்ளது.

அதில், "விசேட தூதுவர் செர்ஜியோ கோர் இன்று காலை இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் உரையாடினார்.

நூற்றுக்கணக்கானோரை காவுகொண்ட மற்றும் இலட்சக்கணக்கானோரை இடம்பெயரச் செய்த திட்வா சூறாவளியைத் தொடர்ந்து அமெரிக்காவின் தொடர்ச்சியான ஆதரவுக்கு இலங்கை ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

அமெரிக்கா நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதுடன், அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவிக்கிறது," என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களில் மீளக் குடியேற்றவேண்டும்!

### கொழும்பு பேராயர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 03

வெள்ளத்தால் பாதிப்புக்களைச் சந்திக்கும் மக்களை, பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றவேண்டும் எனக் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

கம்பஹா - உஸ்வெட்டகெய்யாவ பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கச் சென்றபோதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மழை வெள்ளம் மூழ்காத, பாதுகாப்பான பகுதிகளில் மக்களை மீள்குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கூறினார்.

நாட்டில் அடிக்கடி மழை பெய்வதால், ஏற்படக்கூடிய அனர்த்த நிலைகளைக் கருத்திற் கொண்டு கொழும்பு பேராயர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org